<u>மணப்பாறை நகராட்சி</u>

**2018 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (07. 09.2018) 07–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.கே.சுதா**
**தனி அலுவலர்**

**பொருள் – 1**

அரசாணை (நிலை ) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.26.07.2018 ஆகியவற்றின்படி 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளவாறு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018 தேதிய ந.க.20555/18/ஆ1 எண் சுற்றறிக்கையில் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்விற்கு ஏற்கனவே உள்ள மண்டலங்களை அடிப்படையாகக்கொண்ட சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்புகளை (Zonal Basic Value) மறு நிர்ணயம் செய்திட ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| மண்டலம் (Zone) | சதுர அடிக்கான தற்போதைய மண்டல அடிப்படை மதிப்பு கட்டிட உபயோகத்திற்கு (ரூ. பைசா) | | | சதுர அடிக்கான உயர்த்தப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பு கட்டிட உபயோகத்திற்கு (ரூ. பைசா) | | |
|---|---|---|---|---|---|---|
| | குடியிருப்பு பயன்பாடு | குடியிருப்பு இல்லாத பயன்பாடு | தொழிற்சாலை பயன்பாடு | குடியிருப்பு பயன்பாடு | குடியிருப்பு இல்லாத பயன்பாடு | தொழிற்சாலை பயன்பாடு |
| | (ரூ. பைசா) | (ரூ. பைசா) | (ரூ. பைசா) | (ரூ. பைசா) | (ரூ. பைசா) | (ரூ. பைசா) |
| A | 1.20 | 1.20 | 1.20 | 1.80 | 1.80 | 2.40 |
| B | 0.80 | 0.80 | 0.80 | 1.20 | 1.20 | 1.60 |
| C | 0.50 | 0.50 | 0.50 | 0.75 | 0.75 | 1.00 |

அரசாணை (நிலை ) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.10.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.26.07.2018 –ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018–ம் தேதிய ந.க.20555/18/ஆர்1 எண். சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமம் சொத்துவரி உயர்வு செய்திடவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1. இந்நகராட்சியில் தற்போது சொத்துவரி மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து இந்நகர மக்களுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சாலைகள் வசதி போன்ற அடிப்படை வசதி பணிகளுக்கு தேவையான நிதி வசதி குறைவாக உள்ளதால், மேற்படி அடிப்படை வசதிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றிட ஏதுவாக சொத்துவரி மூலம் கிடைக்கும் வருவாயை பெருக்கும் பொருட்டு 01.04.2018 முதல் செய்யப்பட வேண்டிய பொது சொத்துவரி சீராய்விற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சதுர அடியை

உயர்வுக்கான மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Basic Value) தொகைகளை நிர்ணயம் செய்யலாம்.

2. அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்யலாம்.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகட்டு நெறிமுறைகளின்படி, 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஏற்படுத்தப்பட்ட புதிய சொத்துவரி விதிப்புகள் மற்றும் மறு அளவீடு செய்து விதிக்கப்பட்ட சொத்துவரி விதிப்புகளிலும் எவ்வித மாறுதலும் செய்யப்பட வேண்டியதில்லை. (No Revision).

01.04.2018 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரிகளுக்கு அரசாணையின்படி, மண்டல மதிப்பு (Zonal Value) உயர்வு செய்யப்படுவதால் மேற்படி சொத்துவரிவிதிப்புகளுக்கு உரிய கணக்கீட்டு தாள் தயார் செய்து உயர்த்தப்பட்ட சொத்துவரியில் வித்தியாசத் தொகையினை வசூல் செய்திடலாம்.

**பொருள்–2**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு லாரி TN45 AZ 2257 –க்கு மராமத்து செய்யும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | 19700 |
| 2 | விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | 21000 |
| 3 | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | 21500 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மணப்பாறை நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் –3**

இந்நகராட்சி உரக்கிடங்கு பகுதியான குப்பைகள் கொட்ட இடவசதி செய்யும் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வ், 24 வாட்டர் டேங் ரோடு, திருச்சி | 1330 +18 % GST |
| 2 | அம்மன் எர்த் மூவர்ஸ், அய்யலூர் | 1550 + 18 % GST |
| 3 | வாசு தேவன் எர்த் மூவர்ஸ், மணப்பாறை | 1450 +18 % GST |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் , திருச்சி நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் –4**

இந்நகராட்சியில் சேகரம் செய்யப்படும் குப்பைகள் தற்சமயம் திண்டுக்கல் திருச்சி பைபாஸ் சாலையில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தற்சமயம் குப்பை கிடங்கு முழுவதும் நிரம்பி விட்டமையால் குப்பைகள் கொட்ட இடவசதி ஏதும் இல்லை. எனவே கொட்டப்பட்ட குப்பைகளை தள்ளி இடவசதி ஏற்படுத்தாமல் குப்பைகள் கொட்ட இயலாது. இதனால் பொது சுகாதார பாதிப்பு ஏற்படாமலும், அவசர அவசியம் கருதியும் அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ஹிட்டாச்சி ( Hittachi) இயந்திரம் மூலம் நிரம்பிள்ள குப்பைகளை ஒதுக்கி இடவசதி ஏற்படுத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.95,000/– பொது நிதியிலிருந்து செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமையை அங்கீகரிக்கலாம்
   (2308/2018/H1)

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**